Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

நல்லூர் இன் நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

ஆண்டு 2025    வைகாசி 1    15 5 94    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 86

## க. பொ. த. உயர்தர மாணவருக்கு துரிதமாக ஆள் அடையாள அட்டை

இவ் வருட ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க- பொ- த- உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சே- ஜே- வி- ரணசிங்க தெரிவித்துள்ளார்- பாடசாலை அதிபர்கள் ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இவ் விசேட ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட இருப்பதாகவும் விண்ணப்பம் கிடைத்ததும் ஒரு வாரத்தில் அடையாள அட்டை வேலை பூர்த்தி செய்யப்பட்டு அப் பாடசாலை விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்-

# பிரதமர் ரணில் தென்கொரியா பயணம்; ஆயுதக் கொள்வனவு குறித்து பேசுவார்

## படையினரால் கைதான 9பேர் நிலை தெரியவில்லை

(ஒட்டுசுட்டான்)

அண்மையில் வவுனியா மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயமகா இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 16 தமிழ் இளைஞர்கள் வவுனியாவிலுள்ள ஜோசப் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 9 பேரின் நிலை பற்றி தெரியவரவில்லை.

மேற்படி இராணுவ நடவடிக்கையின் போது பாவற்குளம், குருக்களூர், பூவரசங்குளம் ஆகிய இடங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் ஜோசப் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு பலத்த சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்

விசாரணையின் பின் கடந்த 30-ம் திகதி இவர்களில் 7பேர் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர் ஏனையோர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை.

## கஞ்சாவுடன் வந்த 3 இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

தனமல்விலைப் பகுதியிலிருந்து 340 கிராம் கஞ்சா கொண்டு வந்த மூன்று இராணுவத்தினரை காலிப் பொலிசார் கைது செய்துள்ளனர்-

இவர்கள் ஒவ்வொருவரிடமும் முறையே 130, 120, 90 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது-

இம் மூவரும் காலி நீதிபதி முன் நிறுத்தப்பட்ட போது நீதிபதி இவர்கள் ஒவ்வொருவரையும் 3500 ரூபா ரொக்கப் பிணையிலும் 25000 ரூபா சரீரப்பிணையிலும் செல்ல உத்தரவிட்டார்-

## முதலீட்டாளர்களையும் சந்திப்பார்

(கொழும்பு)

**சிறிலங்காவின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா ஒரு வாரகால பயணம் ஒன்றை மேற்கொண்டு தென்கொரியா செல்லவுள்ளார். இப் பயணத்தின்போது ஆயுதக் கொள்வனவு தொடர்பாக பல சுற்றுப் பேச்சுக்களை தென்கொரிய அரசுடன் நடத்தும் அதேவேளை, தென்கொரிய முதலீட்டாளர்களையும் சந்தித்து பேசவுள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இம்மாதம் இருபத்தி மூன்றாம் திகதி சிறிலங்காவில் இருந்து பயணமாகவுள்ளார். இவரது பயணம் குறித்து செய்தி வெளியிட்டுள்ள 'திவயின' பத்திரிகை இராணுவ ஆயுத தளபாடக் கொள்வனவு குறித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவதே பிரதான நோக்கம் எனத் தெரிவித்துள்ளது.

இதே சமயம் தென்கொரிய முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்துவதும், பிரதமரின் திட்டங்களில் ஒன்று என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது,

சிறிலங்காவில் முதலிடு செய்துள்ள வெளிநாட்டவர்களில் தென்கொரியாவைச் சேர்ந்தமுதலீட்டாளர்கள்முக்கிய பங்குவகிக்கின்றனர். அண்மையில், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகவும், எல்லாளன் படை நடத்திய குண்டு வெடிப்புக்களும், எச்சரிக்கையும் இம் முதலீட்டாளர்களைப் பெரிதும் கலக்கமுறச் செய்துள்ளன, இதன் காரணமாக புதிய முதலீடுகளைச் செய்ய அவர்கள் பின்னடித்து வருவதாகவும் தெரிய வருகின்றது,

இதனைத் தொடர்ந்தே பிரதமர் ரணில் முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவும், அவர்களை உற்சாகப்படுத்தி முதலீட்டை ஊக்குவிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

## இலங்கையில் தமிழர் மீது தொடர்ந்தும் சித்திரவதை

### - ஐ. நா. மனித உரிமை குழு தெரிவிப்பு

(ஜெனிவா)

சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் தொடர்ந்தும் மிக மோசமாக சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று 1994 ஜனவரியில் ஜெனிவாவில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் மனித உரிமைக் குழு தனது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு பகுதிகளில் பொலிசாராலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்படும் தமிழர்கள் அறுபது நாட்களுக்குள் நீதிமன்றத்தில்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## அரசாங்க உயர்பீடம்-கூரே மோதலே உபாலி மீதுநடவடிக்கைக்கு காரணம்

### ராவய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் உயர் தலைவர்களுக்கும் அமைச்சர் சிறிசேன கூரேக்கும் இடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாகவே கூரேயின் சகாவாக இயங்கிய சொத்தி உபாலி மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதாக ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்-

உபாலியைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் கோஷ்டியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி சொத்தி உபாலி மூலமே அமைச்சர் சிறிசேன கூரேயிடம் வீடொன்றைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்தார்-

எனவே சொத்தி உபாலியைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் கோஷ்டியானது சிறிசேன கூரேயினால் அனுப்பப்பட்ட குழுவே என விக்டர் ஐவன் கூறுகிறார்.

## உபாலியின் சகாவைதேடி பொலிசார் வலைவிரிப்பு

# பிரேமதாசா கொலையை ஆராய

...லப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 9 பேரின் நிலை பற்றி தெரியவரவில்லை.

விசாரணையின் பின் கடந்த 30-ம் திகதி இவர்களில் 7பேர் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர் ஏனையோர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை.

## கஞ்சாவுடன் வந்த 3 இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

தனமன்விலைப் பகுதியிலிருந்து 340 கிராம் கஞ்சா கொண்டு வந்த மூன்று இராணுவத்தினரை காலிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரிடமும் முறையே 130, 120, 90 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மூவரும் காலி நீதிபதி முன் நிறுத்தப்பட்ட போது நீதிபதி இவர்கள் ஒவ்வொருவரையும் 3500 ரூபா ரொக்கப் பிணையிலும் 25000 ரூபா சரீரப்பிணையிலும் செல்ல உத்தரவிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி சிறிலங்காவில் இருந்து பயணமாகவுள்ளார். இவரது பயணம் குறித்து செய்தி வெளியிட்டுள்ள 'திவயின' பத்திரிகை இராணுவ ஆயுத தளபாடக் கொள்வனவு குறித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவதே பிரதான நோக்கம் எனத் தெரிவித்துள்ளது.

இதே சமயம் தென்கொரிய முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்துவதும், பிரதமரின் திட்டங்களில் ஒன்று என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

சிறிலங்காவில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டவர்களில் தென்கொரியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் முக்கிய பங்குவகிக்கின்றனர். அண்மையில், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகவும், எல்லாளன் படை நடத்திய குண்டு வெடிப்புக்களும், எச்சரிக்கையும் இம் முதலீட்டாளர்களைப் பெரிதும் கலக்கமுறச் செய்துள்ளன, இதன் காரணமாக புதிய முதலீடுகளைச் செய்ய அவர்கள் பின்னடித்து வருவதாகவும் தெரிய வருகின்றது,

இதனைத் தொடர்ந்தே பிரதமர் ரணில் முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவும், அவர்களை உற்சாகப்படுத்தி முதலீட்டை ஊக்குவிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

...ரியில் ஜெனிவாவில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளா...

...டும் தமிழர்கள் அறுபது நாட்களுக்குள் நீதிமன்றத்தில்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# அரசாங்க உயர்பீடம்-கூரே மோதலே உபாலி மீது நடவடிக்கைக்கு காரணம்

### ராவய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் உயர் தலைவர்களுக்கும் அமைச்சர் சிறிசேன கூரேக்கும் இடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாகவே கூரேயின் சகாவாசக இயங்கிய சொத்தி உபாலி மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதாக ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

சொத்தி உபாலி அரசியலுடன் தொடர்புடைய பல கொலைகளையும் வன்முறைகளையும் மேற்கொண்டார் என்றும் இவரை கைது செய்யச் சென்ற பொலிஸ் கோஷ்டியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி சொத்தி உபாலி மூலமே அமைச்சர் சிறிசேன கூரேயிடம் வீடொன்றைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்தார்.

எனவே சொத்தி உபாலியைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் கோஷ்டியானது சிறிசேன கூரேயினால் அனுப்பப்பட்ட குழுவே என விக்டர் ஐவன் கூறுகிறார்.

# பிரேமதாசா கொலையை ஆராய விசாரணைக் கமிஷன் அமைக்குக

### பிரேமதாசா குடும்பத்தினர் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக ஒரு வருட காலமாக நடைபெற்றுவரும் விசாரணைகளில் தாம் அதிருப்தி அடைந்து இருப்பதாகவும் எனவே இக்கொலை தொடர்பாக உடனடியாக விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறும் பிரேமதாசா குடும்பத்தினர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொலை நடைபெற்று ஒரு வருடத்திற்கு மேல் சென்ற போதும் இரகசியப் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான முடிவுகள் எதனையும் அறிய முடியவில்லைஎன்றும் எனவே இக்கொலை தொடர்பாக தாம் சந்தேகம் அடைவதாகவும் இதுஒரு சதி முயற்சியாக இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேமதாசா மரணம் அடைந்து ஒருவருட காலமாகதுக்கம் அனுஷ்டித்தமையால் இதுவரை இதுபோன்ற வேண்டுகோளைத் தாம் விடுக்கவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இராணுவ அதிகாரி டென்சில் கொப்பேகடுவ கொலை நடைபெற்றவுடன் உள்நாட்டு வெளிநாட்டு கமிஷன்களை நியமித்து ஆராய முன் வந்த அரசாங்கம், லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்டவுடன் ஸ்கொட்லண்டயாட், இரகசிய புலனாய்வு பிரிவினரைக் கொண்டு வந்து விசாரணைகளை மேற்கொண்ட அரசாங்கம் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவரின் கொலை தொடர்பாக விசேட கமிஷன் நியமிக்காமை மிகவும் வருந்தத்தக்கது என

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உலங்கு வானூர்தி நோட்டம்

(குருநகர்)

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலையும், நேற்று காலையும் சிறிலங்கா வான் படையைச் சேர்ந்த உலங்கு வானூர்தி ஒன்று அடுத்தடுத்து வந்து யாழ்- கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது. (21)

## உபாலியின் சகாவைதேடி பொலிசார் வலை விரிப்பு

(கொழும்பு)

பாதாள உலக மன்னனான சொத்தி உபாலியின் மேலும் ஒரு சகாவைத்தேடி ஆறு பொலிஸ் குழுக்கள் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதாக தெரியவருகின்றது

தம்மிக்க என்று அழைக்கப்படும் இவர் சொத்தி உபாலியின் சகல நடவடிக்கைகளிலும் முக்கிய பங்கு வகிப்பவர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன

இதேவேளை சொத்தி உபாலியை விசாரணைக்காகத் தம்மிடம் ஒப்படைக்குமாறு நீர்கொழும்பு பாதுக்க மீரியான, பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பம்பலபிட்டி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம்வேண்டுகோள் விடுத்துள்ளனர்

## தலைமை அதிகாரி நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் காலாட் படை அணியின் ஐந்தாவது பிரிவின் தலைமை அதிகாரியாக மேஜர் எஸ்-எப் தென்னக்கோன் நியமனம் பெற்றுள்ளார்,

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் இரு வருடங்கள் நீடிப்பு

(டில்லி)

விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு மேலும் இருவருடத்திற்கு நீடித்துள்ளது விடுதலைப்புலிகள் மீதான இந்திய அரசின் இருவருடகாலத்தடை இன்று முடிவுக்கு வருவதையடுத்து விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் இரு வருடத்திற்கு நீடிப்பதான அறிவிப்பை இந்தியா வெளியிட்டுள்ளது.

தடா சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளுக்கான தடை மேலும் இரு வருடத்திற்கு நீடிக்கப்படுவதாக நேற்றுக் காலை இந்திய உள்துறை செயலாளர் என். என். வோரா புதுடில்லியில் இந்திய வானொலிக்கு தெரிவித்தார்,

# தெகிவளை மாநகர முதல்வரிடம் இரு ரிப்பிட்டர் துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

தெகிவளை-மவுன்ட் லெவனியா ஆளும் கட்சி மாநகர சபை முதல்வரின் இல்லத்திலிருந்து இரண்டு ரிப்பிட்டர் துப்பாக்கிகளையும் நாற்பது தோட்டாக்களையும் பொலிசார் கைப்பற்றினர்

இவ் வருடம் நவம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கும் அரசியல்வாதிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றும்படி அரசு விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏ. எஸ். பி. தலைமையிலான பொலிஸ் குழு ஒன்று ஆயுதங்களைக் கைப்பற்றியது ஆனால், சில வருடங்களுக்கு முன் இந்த ஆயுதங்கள் பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்டவை என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்தே ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

1989 இல் பிரேமதாசா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சமயம் ஜே.வி.பி நடவடிக்கைகள் தலைகாட்டியதைத் தொடர்ந்து ஆயுதங்கள் அரசியல் வாதிகளின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# இந்திய அரசின் இறையாண்மைக்கு புலிகளின் கொள்கை எதிரானது

### புலிகள் மீதான தடை குறித்து உள்துறை அமைச்சு

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதற்கான காரணங்களை நேற்று இந்திய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது,

தமிழர்கள் அனைவருக்கும் தனிநாடு என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை இந்திய இறையாண்மைக்கும் எல்லைப்பாதுகாப்புக்கும் எதிரானது என்றும் தமிழ் நாட்டில் தமிழ் தேசிய மீட்புப் படை, தமிழ்ப்பாசறை என்ற இரு பிரிவினைவாத அமைப்புகளை உருவாக்கி அவற்றுக்குத் தார்மீக உதவிகளும் பொருள் உதவிகளும் விடுதலைப்புலிகள் அமைப்பு அளிக்கிறது என்றும், சீர்குலைவு, மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் இந்திய இறையாண்மைக்கு கேடு விளைவிக்கிறது என்றும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது,

விடுதலைப்புலிகளின் தூண்டுதலால் கவரப்பட்ட நபர்களும் அமைப்புக்களும், இந்தியாவில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட அது ஊக்குவிக்கிறது என்றும்தனித் தமிழர் நாடு அமைக்கும் நோக்குடன் இந்திய இறையாண்மைக்கும் எல்லைப்பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிக்கிறது என்றும் விடுதலைப் புலிகள் மீது தடைவிதிக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணுவில் 122 தபால்பொதிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த 'றுகுணு' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு 122 தபால்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

நேற்று பிற்பகல் தபால் பொதிகள் இறக்கப்பட்டன- நாளை முதல் தபால் விநியோகம் செய்யப்படும்- (யோ)

## 'மண்ணுக்காக' வீடியோ படம் இன்று வெளியீடு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய ''மண்ணுக்காக'' வீடியோத் திரைப்படம் இன்று மாலை 4.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது. தமிழீழ அரசியல் துறைதுணைப்பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவினை திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். வரவேற்புரையை கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு சி. சேரலாதன் அவர்களும், வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்துவர்.

''மண்ணுக்காக''வீடியோப் படப்பிரதியை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் வெளியிட்டுவைக்க, மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்விரதி அவர்கள் அதனைப் பெற்றுக் கொள்வார். இதனைத் தொடர்ந்து

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

தீராந்திகள், இருப்புக்கேற் (சிறியது, பெரியது,) யன்னல், கதவு நிலைகள் விற்பனைக்குண்டு "பூரணா டிஸ் பென்சறி" 46, இராணி வீதி நல்லூர், (கல்வித்திணைக்கள த்திற்கருகில்) (8267)

### முழு நெல்லிக்காய் தேவை

முழு நெல்லிக்காய்களை நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (PVT) Ltd 14 Seenier Lane Jaffna (சி-9408)

### தவறிவிட்டது

11-05-94 அதிகாலையில் வல்வெட்டித்துறைக்கும்-நெல்லியடிக்கும் இடையில் எனது Hand Bag தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. சண்முகசுந்தரம் மாவீரர் வீதி, வல்வெட்டித்துறை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8271)

### அறிவித்தல்

யா / நாயன்மார்கட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மகளிர் அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டுப் பரிசுப் பொருட்களை 16 5 94 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நாயன்மார்க்கட்டு சனசமூக நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். யா/ நா/ மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நாயன்மார்கட்டு (9424)

### கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் இன்னிசை மாலை இன்று புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா மைதானத்தில் இரவு 7 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

### ஆண்டு விழா

(பருத்தித்துறை)

---

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்
நடாத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய
# அரங்க விழாவும், கிராமிய ஆட்டக் கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடாத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் அமைப்புகள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக செயலகங்களில் 02 - 06 - 1994க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்படவேண்டும்.

### அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக்கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

### பொது அறிவுறுத்தல்கள்:

1. கலைவடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளையொட்டியதாகவும், கலையம்சம் நிறைந்ததாகவும், எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும)
3. அ) சிறந்த நடிகர் ஆ) சிறந்த நடிகை
இ) சிறந்த நெறியாள்கை ஈ) சிறந்த எழுத்துரு
உ) சிறந்த இசையமைப்பு
ஊ) சிறந்த வேடப்புனைவு
என்பவற்றிற்கு சிறப்புப்பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுவர் அரங்கு:

சிறுவர்களின் வயதிற்கும் உள வளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமையவேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்கு கொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக்கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

### பொது அறிவுறுத்தல்கள்:

அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரையுள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இராமநாதன் நுண்கலைக்கழகம்

# இசை விழா

**13 05.94** தொடக்கம் **15.05.94** வரை
(மூன்று தினங்கள்)

கைலாசபதி கலை அரங்கம்

அன்புடன் அழைக்கின்றோம்

மூன்றாம் நாள் நிகழ்வுகள்
15 05-94 - ஞாயிறு

காலை

மங்கல விளக்கேற்றல்
மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் S. V. பரமேஸ்வரன்

**9.00 - 10 00 மணி**

| | | |
|---|---|---|
| பரமேஸ்வரி கணேசன் | — | பாட்டு |
| S. கோபிதாஸ் | — | வயலின் |
| K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |

**10.00 - 11.00 மணி**

| | | |
|---|---|---|
| வர்ண ராமேஸ்வரன் | — | பாட்டு |
| S கோபிதாஸ் | — | வயலின் |
| S. துரைராஜா | — | மிருதங்கம் |
| S. கமலதாஸ் | — | கடம் |

**11.00 - 12.00 மணி**

| | | |
|---|---|---|
| கனகாம்பரி பத்மநாதன் | — | பாட்டு |
| R ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |
| S. நாகராஜன் | — | கஞ்சிரா |

மாலை

மங்கல விளக்கேற்றல்
K. பரமேஸ்வரன், பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்

**4.00 - 5.00 மணி**

| | | |
|---|---|---|
| மேரி சரோஜா ஜஸ்டின் | — | பாட்டு |
| R.S கேசவமூர்த்தி | — | வயலின் |
| S துரைராஜா | — | மிருதங்கம் |

**5.00 - 6.30 மணி**

| | | |
|---|---|---|
| L. திலகநாயகம்போல் | — | பாட்டு |
| R S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| K கண்ணதாஸன் | — | மிருதங்கம் |
| S. நாகராஜன் | — | கஞ்சிரா |
| சதா வேல்மாறன் | — | கடம் |

**6.30 8.00 மணி**

| | | |
|---|---|---|
| N. K. பத்மநாதன், V K. பஞ்சமூர்த்தி | — | நாதஸ்வரம் |
| K. நித்தியானந்தன், K. சிவகுமார் | — | தவில் |

வாழ்த்துவோர்:

'ராஜன் இசையகம்'
இசைக்கருவி திருத்தகம்
142, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

---

## பணிப்பாளர் விடுவிக்காததால் முதன்மை ஆசிரிய நியமனம் ரத்து

(நல்லூர்)

வலயம் 1 ற்கான பணிப்பாளர் விடுவிக்காத காரணத்தால் முதன்மை ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை

கல்விவலயம் 1 ற்கான பணிப்பாளர் விடுவிக்காத காரணத்தால் ஆங்கிலபாட முதன்மை ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டவரின் நியமனம் தொடரமுடியாத நிலை ஒரு ஆசிரியருக்கு கல்வி வலயம் 2 ல் ஏற்பட்டுள்ளது

இச்சம்பவம் தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது கல்விவலயம் 1 ன்கீழ் இயங்கும் முதற்தர பாடசாலை ஒன்றில் ஆங்கில பாட ஆசிரியராக கடமை புரிந்தஆசிரியர் ஒருவர் ஆங்கில பாட முதன்மை ஆசிரியர் பரீட்சைக்கு கடந்த மாசிமாதம் யாழ்ப்பாணத்தில் தோற்றினார் வலயம் 2ல்விதிக்கப்பட்ட நியமன விதிகளின்படி 50 வயதுக்கு மேற்பட்ட இவர் தமது விண்ணப்பத்தை நிரப்பி பாடசாலை அதிபர் மூலம் அனுப்பி வைத்துள்ளார்

பரீட்சையில் சித்தியடைந்த இவர் கல்விவலயம் 2 ற்கான பணிப்பாளரின் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி அவரினால் சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு ஆங்கிலப்பாட முதன்மை ஆசிரியராக சித்திரை மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டு தமது கடமையைப் பொறுப்பேற்று சிறிது காலம் தமது கடமைக்குச் சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கும் சென்று வந்தார். ஆனால் வலயம் 1 ற்கான கல்விப்பணிப்பாளர் இவரை தமது வலயத்தில் இருந்து விடுவிக்காத காரணத்தினால் மீண்டும் இவர் தமது முன்னைய பாடசாலைக்கே ஆங்கில பாட உதவி ஆசிரியராக திரும்பியுள்ளார் என அறியப்படுகிறது. (17)

---

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

## விசேட கலந்துரையாடல்

இன்று 15-05-94 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் விசேட கலந்துரையாடல் நடைபெறவிருப்பதால் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தகர் சங்கங்களின் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்
வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்
(சி-9425)

---

## நினைவு கூருகின்றோம்.. 15.05.1994

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் நயினா தீவு) சிறிலங்கா கடற்படையினரால் "குமுதினி" என்னும் பயணிகள் படகினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் உட்பட பல தமிழர்கள்,

1986ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட,

**சிங்கோ மாஸ்ரர்** (சந்தையா பகவதீசிங் - வந்தாறுமூலை -மட்டு)

மட்டு - வாழைச்சேனை கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★**2ம் லெப். குட்டிமணி** (பாலம்போட்டாறு, தம்பலகமம் - திருமலை)

1987ஆம் ஆண்டு மட்டு - தியாவெட்டைவான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு சுடடுக் கொலை செய்யப்பட்ட,

...ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். யா/நா/மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நாயன்மார்கட்டு (9424)

---

## கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் இன்னிசை மாலை இன்று புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா மைதானத்தில் இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## ஆண்டு விழா

(பருத்தித்துறை)

து பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய தமிழொலி மாணவர் மன்றத்தின் 3-வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் திருவள்ளுவர் சனசமூக நிலைய மைதானத்தில் தமிழொலி மாணவர் மன்றத் தலைவர் திரு சி. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மன்றத்தின் ஆண்டு மலரை வெளியிட்டு வைத்தார். ஊளைப்பாறிய அதிபர் திரு. ம. சின்னையா மலரைப் பெற்றுக் கொண்டார். கிராம சேவை அலுவலர் திரு சோ. வசந்தகுமார், அதிபர் திரு ஆறுமுக, பரமேசன், சனசமூக நிலையத் தலைவர் திரு வீ. வடிவேலு, கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. க. சின்னத்தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ மாணவிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன (25)

## ஓவியப் போட்டி

(தொல்புரம்)

பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டி ஒன்றை வட்டு லயன்ஸ் சங்கம் அண்மையில் நடாத்தியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயிலும் ஆண்டு 1 முதல் ஆண்டு6 வரையிலான மாணவர்களுக்கிடையே, "உயிரினங்களுடன் ஒன்றிணைவோம்" என்ற தலைப்பில் நடைபெற்ற இப் போட்டியில் சுமார் 200 மாணவ, மாணவியர் பங்குபற்றினர் இதில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த ஓவியங்களுக்கு விரைவில் பரிசில்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. (41)

---

3. அ) சிறந்த நடிகர் ஆ) சிறந்த நடிகை
இ) சிறந்த நெறியாள்கை ஈ) சிறந்த எழுத்துரு
உ) சிறந்த இசையமைப்பு
ஊ) சிறந்த வேடப்புனைவு
என்பவற்றிற்கு சிறப்புப்பரிசுகள் வழங்கப்படும்.

**சிறுவர் அரங்கு:**

சிறுவர்களின் வயதிற்கும் உள வளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமையவேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்கு கொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக்கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

**பொது அறிவுறுத்தல்கள்:**

அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரையுள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
(2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
(5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்:**

1) கோலாட்டம் 2) கரகம்
3) ஆட்டக்க வடி 4) கும்மி

**பொது அறிவுறுத்தல்கள்:**

அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

ஃ குறிப்பு:

அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும் மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

ஈ) மேலதிக விபரங்களைப்பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**விடுதலைப் புலிகள்**
**கலை பண்பாட்டுக் கழகம்**
**நடுவப் பணியகம்**
**தமிழீழம்**

---

S. துரைராஜா

**5.00 - 6.30 மணி**

| | | |
|---|---|---|
| L. திலகநாயகம்போல் | — | பாட்டு |
| R. S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |
| S. நாகராஜன் | — | கஞ்சிரா |
| சதா வேல்மாறன் | — | கடம் |

**6.30 - 8.00 மணி**

| | | |
|---|---|---|
| N. K. பத்மநாதன், V. K. பஞ்சமூர்த்தி | — | நாதஸ்வரம் |
| K. நித்தியானந்தன், K. சிவகுமார் | — | தவில் |

வாழ்த்துவோர்:

'ராஜன் இசையகம்'

இசைக்கருவி திருத்தகம்

142, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

(சி-9397)

---

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரி வடிவிலான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும்.

**விடுதலைப் புலிகள்**
**கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்**

கரும்புலிகள் நாளையொட்டிய

**அரங்கவிழாவும்**
**கிராமிய ஆட்டக் கலைவிழாவும்**

## விண்ணப்பப் படிவம்

1. பங்குபற்றும் அமைப்பின் பெயர்:- ..............................
..............................

2. முகவரி:- ..............................
..............................

3. கோட்டத்தின் பெயர் :- ..............................

4. நாடகத்தின் தன்மை :-
அ: ..............................
ஆ: ..............................
இ: ..............................
ஈ: ..............................

5. கிராமிய ஆட்டக்கலை :-
அ: ..............................
ஆ: ..............................
இ: ..............................
ஈ: ..............................

இப்போட்டிகளின் விதிமுறைமைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

..............................

(சி-9422) விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் நயினா தீவு) சிறிலங்கா கடற்படையினரால் "குமுதினி" என்னும் பயணிகள் படகினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் உட்பட பல தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட,

**சிங்கோ மாஸ்ரர்** (சுந்தையா பகவதீசிங் - வந்தாறுமூலை -மட்டு)

மட்டு - வாழைச்சேனை கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★**ற குட்டிமணி** (பாலம்போட்டாறு, தம்பலகமம் - திருமலை)

1987ஆம் ஆண்டு மட்டு - தியாவெட்டைவான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு சுடடுக் கொலை செய்யப்பட்ட,

**டெனி** (விஜயபாலா ரவிச்சந்திரன் - மட்டு)

1988ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**கயல்** (சின்னத்தம்பி ஆத்மலிங்கம் - அக்கரைப்பற்று - அம்பாறை)

மல்லாவியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது இந்தியப் படையினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1989ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து சிகிச்சைக்காக தமிழகம் செல்லும்போது வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் நவம-டி** (செல்லப்பெருமாள் அருமைராசா-கொக்குத்தொடுவாய் -மணலாறு)

திருமலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மிருசுவிலில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட களுவங்கேணியைச் சேர்ந்த கடற்றொழிலாளியான தமிழிளைஞன் 01ஐச் சேர்ந்த கடற்றொழிலாளியான தமிழிளைஞன்

1992ஆம் ஆண்டு மட்டு - குடாவெட்டையில் எதிர்ப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் குலதீபன்** (நாகலிங்கம் சச்சிதானந்தம் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**தயாநிதி** (சின்னத்தம்பி கலாநிதி - அம்பிலாந்துறை - மட்டு)

மட்டு - வலதுகரைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப். நிலவன்** (வைத்திலிங்கம் ஜெயகாந்தன் - கொம்மாந்துறை - மட்டு)

**தங்கேசன்-ஆனந்** (சிதம்பரப்பிள்ளை சுந்தரலிங்கம் - வாழைச்சேனை - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்-

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9421)

யாழ்ப்பாணம்

நன்றி நவிலலும்
அந்தியேட்டி அழைப்பும்



இராமதாஸ் பிறேமதாஸ்
(குட்டியையா)

மலர்வு : 30 - 01 - 1955
உதிர்வு : 16 - 04 - 1994

16 04 1994 அன்று ஈரான் தேசத்தில் கப்பலில் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அதற்குமுன் செய்தி அறிந்ததிலிருந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அறிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், 1994-05-16-ந் திகதி திங்கட்கிழமை கொத்தியால் வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

(8248)

31-ம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேஷ்டி அழைப்பும்



மலர்வு:- 23-02-1909

உதிர்வு:- 15-04-1994

# 180 நாள்கள் பணியாற்றிய அமைய ஊழியர் நிரந்தரம்

(கொழும்பு)

அரசசேவையில் 180 நாள்கள் தொடர்ச்சியாக சமயாசமய ஊழியர்களாக பணியாற்றியவர்கள் உடனடியாக நிரந்தரமாக்கப்படுவர். ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

பொது நிர்வாக அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இம்மாதம் முதலாம் திகதிவரையில் 180 நாள்கள் தொடர்ச்சியாக வேலை செய்திருந்த சகல சமயாசமய ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படுவர்.

இது குறித்த சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்கள் சம்பந்தமான விபரங்களை பொது நிர்வாக அமைச்சிற்கும் வரவுசெலவு திட்டப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு பிரெஞ்சு மருத்துவ குழு?

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்ட ஆதார வைத்திய சாலையை பிரெஞ்சு மருத்துவக் குழுவினரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக கொழும்பில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் முயற்சியின் முதற்கட்டமாக பிரெஞ்சு மருத்துவக் குழு அதிகாரிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி வைத்தியசாலையை தமது மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவதற்கு பிரெஞ்சு மருத்துவக்குழு தயாராக இருக்கிறது.

எனினும் இவ் வைத்தியசாலையை பிரெஞ்சு மருத்துவக் குழுவினரின் மேற்பார்வைக்கு கீழ் விடுவதுகுறித்த அரச அதிகாரிகளது கொள்கைத்திட்டம் குறித்து மேற்படி குழு தீவிரமாக ஆராய்கிறது என்றும் இவ்விடயம் குறித்து இதுவரை இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது. (க)

# சேதனப் பசளை உற்பத்தி மாநகரசபை திட்டம் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சேதனப்பசளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை தயாரித்து வருகிறது.

யாழ். மாநகர எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் மற்றும் சழிவுப்பொருட்களில் இருந்து இச்சேதனப் பசளையை உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் இலக்காக உள்ளது.

கழிவுப்பொருட்களில் இருந்து பசளையை உற்பத்தியாக்கும் மேற்படி திட்டத்துக்கு அரபு நாடுகளில்பயன்படுத்தப்படும் உயர்தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேதனப்பசளை குடாநாட்டு விவசாயிகளுக்கு சகாயவிலையில் விற்பனை செய்யப்படவிருக்கிறது. (க) (தி)

ஊடு திருப்பியோருக்கு

# கொடுப்பனவு குறித்து ஆராயப்படுகின்றது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இக் கொடுப்பனவுகளை வழங்குவது குறித்த முதற்கட்ட நடவடிக்கையாக நாடு திரும்பிய அகதிகள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. எனினும் இக் கொடுப்பனவு சம்மந்தமாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இவ் விடயம் குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுடன் யாழ். செயலகத்திட்டப்பணிப்பாளர் திரு எஸ். பத்மநாதன் பேச்சு வார்த்தை நடாத்தி வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு

# ஆட்டோ வழங்க அமைச்சு இணக்கம்?

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையின் பயன்பாட்டுக்கென ஆட்டோ ஒன்றை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு கொள்கையளவில் இணங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலை நிர்வாகத்தினர் தமது உத்தியோக பூர்வ வேலைகளுக்கும் இரவு வேளைகளில் டாக்டர்களை அழைத்து வருவதற்கும் அம்புலன்ஸ் வண்டிகளையே பயன்படுத்தி வருவது தெரிந்ததே.

இதனால் பணம் வீண்விரயமாவதாகவும் நோயாளிகளை ஏற்றுவதற்கு மட்டும் இதனை பயன்படுத்தலாம் எனவும் நிர்வாகத்தினர் சுகாதார அமைச்சிடம் கட்டிக்காட்டியதை அடுத்து யாழ்போதனா வைத்தியசாலை ஆட்டோ ஒன்றைக்கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (ச,சி)

# உ. கிழங்குவிதை தருவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுமார் 200மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்ய கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது

இவ்விதை உருளைக்கிழங்கு எடுத்து வரப்படும் இடத்து விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (பா)

"இயேசு உங்களை விடுவிக்கின்றார்"

தெய்வீக சுகமளிக்கும்
கூட்டம்

சுவிஷேகர் நிரோஷன் அமிர்தலிங்கம் (இயேசு சந்திக்கிறார் ஊழிய ஸ்தாபகர் கொழும்பு) அவர்கள் தேவசெய்தி கொடுத்து - ஜெபிப்பார்.

திகதி:- 15-05-94 (ஞாயிறு)

நேரம்:- மாலை 6-00 மணி

இடம்:- அப்போஸ்தலசபை மண்டபம் ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி.

இக்கூட்டத்தில் பிசாசின் கட்டு, பில்லி சூனியம், பயம், வியாதிகள் யாவற்றிற்காகவும் ஜெபிக்கப்படும்.

இன மத வேறுபாடின்றி யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

அப்போஸ்தல சபை
சுண்டுக்குளி.

(8286)

# இலவச சீருடை

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு இலவச சீருடைகள் 1994-ம் ஆண்டிற்குரியன வழங்கப்படவுள்ளன.

(86)

# கலந்துரையாடல்

தீவக உதவி அரச அதிபர் பிரிவில் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கள் காலை 10 மணிக்கு தீவக உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும்.

# நிதி மீளளிப்பு

சப்றா யுனிகோ பினான்ஸ் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தோர்க்குநிதிமீளளிப்புத் திட்டத்தின் கீழ் முதலாவது

விக்னா கல்வி
நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



மலர்வு:-

23- 02- 1909

உதிர்வு:-

15- 04- 1994

### அமரர் ஐயாத்துரை இரத்தினசாமி

(கப்பலோட்டி மன்னன்)

*அமெரிக்கா சென்ற வல்வை "அன்னபூரணி" கப்பலின் மாலுமி*

1994. 05. 15 இன்று நடைபெறவிருக்கும் அந்தியேஷ்டி, சபிண்டீகரண கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

-குடும்பத்தினர்.

(8218)

---

## 1 ம் ஆண்டு நினைவலைகள்

திதி: 15- 5-1994



மலர்வு:

01.01.1929

உதிர்வு,

26.05.1993

### திரு. இளையதம்பி இரத்தினம்

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

ஆருயிர் தந்தையே
அன்பகலாத் தெய்வமே
நாமிருக்கும் வரை மறவோம்
என்றும் எங்கள் மனதில் உங்கள் நினைவே

தகவல்;
இ. சேகர்
பளை மத்தி,
பளை.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(8229)

---

களில் இருந்து இச்சேதனப் பசளையை உற்பத்தி செய்

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேதனப்பசளை

நாடு திரும்பியோருக்கு

## கொடுப்பனவு குறித்து ஆராயப்படுகின்றது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இக் கொடுப்பனவுகளை வழங்குவது குறித்த முதற்கட்ட நடவடிக்கையாக நாடு திரும்பிய அகதிகள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. எனினும் இக் கொடுப்பனவு சம்மந்தமாக முடிவு எதுவும் எடுக்கப்பட வில்லை.

இவ் விடயம் குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுடன் யாழ். செயலகத்திட்டப்பணிப்பாளர் திரு எஸ். பத்மநாதன் பேச்சு வார்த்தை நடாத்தி வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு

## நீர் இறைக்கும் இயந்திரம் யூ.என்.எச்.சீ.ஆர் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் சிறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலைக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது (க)

---

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு இலவச சீருடைகள் 1994-ம் ஆண்டிற்குரியன வழங்கப்படவுள்ளன.

(86)

## கலந்துரையாடல்

தீவக உதவி அரச அதிபர் பிரிவில் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கள் காலை 10 மணிக்கு தீவக உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும்.

## நிதி மீளளிப்பு

சப்றா யுனிகோ பினான்ஸ் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தோர்க்குநிதிமீளளிப்புத் திட்டத்தின் கீழ் முதலாவது தவணை கொடுப்பனவாக 20 வீத வைப்புத்தொகை தற்போது செலுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணப் பணிமனையூடாக முதலீடு செய்தோர்க்கான முதல் தவணைக் கொடுப்பனவு 207 மின்சார நிலைய வீதியிலுள்ள அலுவலகத்தில்நடைபெறுகின்றது என சிரேஷ்ட ஒருங்கிணைப்பு முகாமையாளர் அறிவிக்கிறார்.

---


தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப்படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும்

முன்னணி நிறுவனம்

# படமாடம்

சகலவிதமான
- பூக்கண்ணாடி
- சாதாரண கண்ணாடி
- இனிப்பு கண்ணாடிப் பெட்டிகள்
- மீன் தொட்டிகள்
- 24 x 36 1/2 நூல் கண்ணாடி

ஆகியவற்றை மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

**படமாடம்** அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மலர்ந்த புதுவருடத்திலிருந்து எமது ஸ்தாபனத்தால் சகலவகையான கண்ணாடி வேலைப்பாடுகளும் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(சி-9413)


---

அப்போஸ்தல சபை
சுண்டுக்குளி.

(8286)

---


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

OL பிரிவு 5 (8.30 - 2.00)

ஆரம்பம்: 16-5-1994 காலை 8.30

- தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை
- இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே ஆரம்பிக்கப்படும்.
- அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9402)


---

## எண்ணத்தில் நீங்காத ஏற்றமிகு தாரகையே!

## விண்ணமர ஏந்தோம் துதி

திருமதி

### பரமேஸ்வரி கனகலிங்கம்

அவர்கள்

(இளைப்பாறிய ஆசிரியை)

மண்ணில்: 8-12-1932 விண்ணில்: 28-3-1994

தாயாகித் தாரமுமாய்த் தலைசான்ற உடன்பிறப்பாய்
சேயாய் எமைக்கருதிக் காத்தாயே! - மாயா நல்
வாழ்வளித்த செல்வமே! வதங்கியிங்கு நாம் துடிக்க
வீழ்ந்தாயோ வல்வினையால் நீ!


ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்

எமது இதய தெய்வத்தின் ஆத்மசாந்தி நாடிஇன்று 15-05-94 மு. ப 10 மணிக்கு எமது இல்லத்தில் இடம் பெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

உப்புகேணி வீதி.
பெரிய மாவடி,
சாவகச்சேரி.

(8275)




தமிழீழ கலை வளர்ச்சியில்

மற்றுமொரு மைல்கல்!

மண்ணுக்காக...

மண்ணுக்காக



# ண்ணுக்காக


தமிழீழ கலை வளர்ச்சியில்
மற்றுமொரு மைல்கல்!

**தமிழீழ கலைஞர்கள் - போராளிகள் ஒன்றிணைப்பில் உருவான**

## மண்ணுக்காக

"திரைப்படம் சிறப்புற வாழ்த்துகின்றோம"

- ★ தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம்
- ★ யுனிரெக் பொறியியல் நிறுவனம்
- ★ உப்பு உற்பத்தி நிறுவனம்
- ★ தோல் பதனிடல் நிறுவனம்
- ★ எழுச்சி பாதை தும்பு ஆலை
- ★ காமாட்சி இரும்புத் தொழிலகம்
- ★ இளந்தளிர் மர தொழிலகம்
- ★ காகித தொழிற்சாலை
- ★ எண்ணெய் உற்பத்தி நிலையங்கள்
- ★ அரிசி ஆலைகள்
- ★ புதிய வர்த்தக அச்சகம்
- ★ பாய் உற்பத்தி நிலையங்கள்

- கைத்தொழில் பகுதி -

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

மண்ணுக்காக...

முழு வெற்றி பெற வாழ்த்தும்

**ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்**

இல. 214, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

மண்ணுக்காக

வெற்றி பெற வாழ்த்துகின்றோம்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கு

V

**'ஸ்கை லைன்ஸ்'**

281 பி, மணிக்கூட்டு கோபுர வீதி,

யாழ்ப்பாணம்.

''மண்ணுக்காக" வெற்றிக்கு
மனமார்ந்த வாழ்த்துகள்!

புதிய மண்ணிலே
பதியும் விதையாக
வெற்றி வளர்ந்து
விருட்சமாய் செழிக்கட்டும்

காலை, மாலை சிற்றுண்டி வகைகளுக்கும்
மதிய உணவிற்கும்

**அபிராமி விலாஸ்**

212, 214 இராமநாதன் வீதி,
(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

விடுதலை வேண்டி நிற்கும் மண்ணுக்காக
குருதிச்சுவடு பதித்து நிற்கும் மண்ணுக்காக
ஆம்! வெள்ளித்திரையில் மண்ணுக்காக!
மண்ணின் கதையை எடுத்து
இயம்பி நிற்கும்

"மண்ணுக்காக"

முழு வெற்றிபெற வாழ்த்தும்

**சுகந்தன் மருந்தகம்**

இல. 81, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

விடுதலை பெறும் மண்ணிற்காக
வளம் பெறும் மண்ணிற்காக
வெற்றி பெற வாழ்த்தும்

மருந்து வகைகள், மற்றும் பால்மா
வகைகளையும் நியாய விலையில்
பெற்றுக் கொள்ள

**குறிஞ்சி மருந்தகம்**

இல. 3, நவீனசந்தை,

திருநெல்வேலி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

'மண்ணுக்காக' திரைக்காவியம்
மாண்பாக காவியமாய்
மனதிலே பதியட்டும்.

வெற்றி செழிக்க
வாழ்த்துகிறோம்!

தரமான - சுவையான
சிற்றுண்டி வகைகளுக்கு

**மூர்த்தி சிற்றுண்டி அகம்**

140, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

நல்லூர் பிரதேச நூலகம் ... மன்றம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

கள்வனுக்கு ஒவ்வொரு புதரும்
ஒரு காவல் அதிகாரியாகவே தோன்றும்,
- ஷேக்ஸ்பியர் -


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## அர்த்தமற்ற சீற்றம்

கனடாவின் சட்டமா அதிபர் மார்க்கஸ் பேக்கர் மீது சிறிலங்கா அரசாங்கம் எரிந்து விழுந்துள்ளது. சில கனடா நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் சிறிலங்கா அரசிற்கு எதிராக செயற்படுவதாகவும் அவர்மீது குற்றம் சாட்டியுள்ளது

சிறிலங்காவின் இச் சீற்றத்திற்கும் குற்றச்சாட்டிற்கும் காரணம் திரு. மார்க்கஸ் பேக்கர், இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பவேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளமையே ஆகும். இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டு வரும் சுவிஸ் அரசிற்கு அவர் எழுதிய கடிதத்தில் இலங்கையில் அகதிகள் சென்று வாழக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

திரு. மார்க்கஸ் பேக்கர் சுட்டிக்காட்டிய விடயத்தில் என்ன தவறு உள்ளது, வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன, மக்களின் குடியிருப்புக்கள் மீது ஷெல்வீச்சு, குண்டு வீச்சு எனத் தாக்குதல்கள் இடம்பெறுவது சாதாரண வநடடிக்கை;

இதேசமயம் மக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதோ அன்றி சித்திரவதை செய்யப்படுவதோ, அன்றி சிறையில் அடைக்கப்படுவதோ நீற்கவில்லை மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அத்தோடு மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவசது பொருளாதார வாழ்வு சிதைக்கப்பட்டுள்ளது. சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை இந்நிலையானது தனியாக வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, தமிழர்களைப் பொறுத்து தென்னிலங்கையிலும் இவ்வாறான சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையே உள்ளது.

தமிழர் என்ற ஒரு காரணத்திற்காக அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படுகின்றனர். தடுத்து வைக்கப்படுகின்றனர் சித்திரவதை செய்யப்படுகின்றனர். சிறிலங்கா அரசு கூறுவது போல் தமிழர்கள் கொழும்பில் பாதுகாப்பாகவும் இல்லை. ஜனாதிபதி டி.பி. கூறியது போல் சிங்களவர்கள் அவர்களை

## அரசியல்வாதிகளின் ஆயுதங் களையும் பணியில் பொலிஸ்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசியல்வாதிகளிடமுள்ள அனுமதியற்ற ஆயுதங்களை களையுமாறு பொலிசாருக்கு அரசு பணிப்புரை விடுத்துள்ளது. இது தொடர்பான பணியை பொலிசார் ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்தவாரம் ஆளும்கட்சியைச் சேர்ந்த மேயர் ஒருவரின் தெஹிவளை வீட்டிலிருந்து இருதுப்பாக்கிகளையும் நற்பது சுற்று தோட்டாக்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர் தமக்கு விடுக்கப்பட்ட உத்தரவையடுத்தே மேயரின் இவ்வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர் மேயருக்கான இந்த ஆயுதங்கள் சில ஆண்டுகளுக்குமுன் பொலிசாரினாலேயே அவருக்கு வழங்கப்பட்டதை பொலிசார் ஒப்புக்கொண்டுள்ளனர். பல அரசியல்வாதிகளுக்கு 1989 இல் ஜே:வி.பி நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தில் இருந்த போது வழங்கப்பட்டிருந்தன. பொலிசாரின் தற்போதைய நடவடிக்கையை கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி சி விகுணரட்ன வரவேற்றுள்ளார்.

## திருமலைசென்றபஸ்விபத்து இனந்தெரியாத சிறுமி பலி

(கொழும்பு)

கண்டியில் இருந்து திருகோணமலை நோக்கி சென்ற பயணிகள்பஸ்வண்டியொன்று தனியார் வாகனமொன்றுடன் மோதியதில் ஒரு சிறுமி உயிர் இழந்ததுடன் இருத்தி மூன்று பயணிகள் படுகாயம் அடைந்துள்ளனர்.

மேற்படி பயணிகள் பஸ் வண்டி தம்புளைக்கு அண்மையில்விபத்துக்கு உள்ளானதாகவும்இறந்த சிறுமி தொடர்பாக விபரம் ஏதும் பெறமுடியாது இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## எதிர்வரும் 19 ஆம் திகதி அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

எதிர்வரும் 19 ஆம் திகதியளவில் அமைச்சரவையில் மாற்றங்கள் நிகழலாம் என கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அன்றைய தினம் அல்லது மறுதினம் காமினி திஸ்ஸநாயக்க, ரொனிடிமெல், காமினி ஜெயவீக்ரம பெரேரா ஆகியோர் மீண்டும் எம்.பியாக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

காமினியும், ரொனிடிமெலும் எம். பியாக நியமிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு அமைச்சரவையில் உயர் பதவி வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஐ. தே. க. தேசியப்பட்டியல் உறுப்பினர்களான அலக்ரொபட்சன், காலிங்க ஒபேவன்ச, எம். எச் அமிட் ஆகியோர் காமினியும், ரொனிடிமெல்லும் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதற்கு தமது பதவியை விட்டு விலக தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர்.

## அடுத்து வரும் கப்பல்களில் சீனி எடுத்துவரநடவடிக்கை

(கொழும்பு)

யாழ் குடாநாட்டுக்கு தேவையான சீனியை கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக எடுத்து வருவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ் செயலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் குடாநாட்டுக்கு அடுத்து வர இருக்கும் சரக்குகப்பல்களில் சீனியை அதிகளவு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இவ் விடயம் குறித்து துரித நடவடிக்கை எடுக்கும்படி கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவுக்கு யாழ். அரசாங்க அதிபர் அவசர வானொலிச் செய்தி ஒன்றை ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளார் (ச)

## தனியார் சேவையினரிடம் வைத்தியசாலை பாதுகாப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் காவலாளிகள் அனைவரும் வேறுபகுதிகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

தற்போது ஆறு காவலர்கள் கடமையாற்றுவதாகவும் இதில் ஐந்து பேரை இம்மாத இறுதிக்குள் அங்குள்ள வேறு வேலைகளுக்கும் மாற்றவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது

இவ் வைத்தியசாலையின் பாதுகாப்பு கடமைகள் முழுவதும் தனியார் பாதுகாப்பு சேவையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம் இனிமேல் இத் தனியார் பாதுகாப்பு சேவையினரே பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது [ச] [சி]

## மாணவ தாதிகள் தெரிவு அனுமதி அட்டைகள் வந்தன

## 53 ஆயிரம் குடும்பங்கள் தகுதி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வறுமை நிவாரண நிதியைப் பெறத்தகுதியாக 53 ஆயிரம் குடும்பங்கள் இருப்பதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மதிப்பிட்டுள்ளது வடக்கு கிழக்குக்கு வெளியே 40 ஆயிரம் குடும்பங்கள் இந்நிவாரணம் பெறதகுதி பெற்றவர்களாவர்;

### பரீட்சை

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் தோற்றி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாகாணசபையின் கீழுள்ள

## கெல்ற் ஆங்கில வகுப்பு; பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1993 - 94 ஆம் கல்வியாண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான 'கெல்ற்' ஆங்கில வகுப்பு சுமார் ஆறு கல்லூரிகளில் நடைபெறுகின்றன

யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆகியவற்றில்நடைபெறுகின்றன.

இவ் ஆங்கில வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரைக்கும் இவ் ஆங்கில வகுப்புக்களுக்கு சமுகமளிக்காத பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்கள் உடன் அவரவருக்கு வசதியான நிலையத்தில் பதிவு செய்து செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## பரிகாரக் கல்வி ஏற்பாடு

(தொல்புரம்)

யாழ்ப்பாணம் வடக்குக்கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்க்கு பரிகாரக் கல்வி கற்பித்தலுக்கான நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்

மேற்படி கல்விவலயபாடசாலைகளிலே நடந்த முதலாம் தவணையின் பெறுபேறுகள் ஆராயப்பட்டு இதற்கான செயற்பாடுகளில் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வடக்கு வலய கல்விப் பணிப்பாளரினால் கல்விவலய உத்தியோகத்தர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மூத்தமை ஆசிரியர்களின் உதவியுடன் ஒவ்வொரு கோட்டத்திலும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை ஏற்படுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

நடப்பு வருட முதலாம் தவணையின்போது மாணவர்களால் தரப்பட்ட விடைகளில் காணப்படும் பிழைகள் குறைநிறைகள், பிள்ளைகளின் குறைபாடுகள். போன்றவைகளும் ஏனையவைகளும் இவ் ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளதாக கல்வி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

## சிறந்த வீரராக தெரிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் 1994ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரனாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக விளையாட்டு வீரர் திரு கு. றொனால்ட் ஜீவகுமார் தெரிவு செய்யப்பட்டு பாராட்டுக்களைத் தட்டிக் கொண்டார்.

1992ம் ஆண்டு 1. 64 மீற்றரைப் பாய்ந்து உயரம் பாய்தலில் நிலை நாட்டப்பட்ட சாதனையை முறியடித்து 1.75 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையையும் இவர் நிலை நாட்டியுள்ளார் (25)

## மீதி வைத்திய உபகரணம் எடுத்துவர முயற்சி

(நமது நிருபர்)

பிரிட்டிஷ் அரசினால் யாழ் போதனா வைத்திய சாலைக்கென வழங்கப்பட்ட உபகரணங்களின் ஒரு தொகுதி விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இவ் உபகரணங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட முடியாத நிலையில் கொழும்பில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்போது கொழும்பு சென்ற யாழ் போதனா வைத்திய சாலை அதிகாரிகள் இவற்றை இங்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும் இன்னும் மூன்று கொள்கலன்களில் அடைக்கப்பட்ட இவ் உபகரணங்களே இங்கு எடுத்து வரப்படாதிருப்பதாகவும் தற்போது இவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கான கப்பல் ஒழுங்குபடுத்தப்பட்டதும் அடுத்த மாத மளவில் இங்குவந்து சேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

## யாழ். மாவட்டத்திற்கு 20000 உயரின தென்னை விதைகள்

இதேசமயம் மக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதோ அன்றி சித்திரவதை செய்யப்படுவதோ, அன்றி சிறையில் அடைக்கப்படுவதோ நீற்கவில்லை மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அத்தோடு மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவரது பொருளாதார வாழ்வு சீதைக்கப்பட்டுள்ளது. சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை இந்நிலையானது தனியாக வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, தமிழர்களைப் பொறுத்து தென்னிலங்கையிலும் இவ்வாறான சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையே உள்ளது.

தமிழர் என்ற ஒரு காரணத்திற்காக அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படுகின்றனர். தடுத்து வைக்கப்படுகின்றனர் சித்திரவதை செய்யப்படுகின்றனர். சிறிலங்கா அரசு கூறுவது போல் தமிழர்கள் கொழும்பில் பாதுகாப்பாகவும் இல்லை. ஜனாதிபதி டி.பி. கூறியது போல் சிங்களவர்கள் அவர்களை சகோதரத்துவத்துடன் நடத்தவுமில்லை.

இதேசமயம் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் கூட இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர், சிலர் இராணுவத்தினரின் தாக்குதலுக்குப் பலியாகியிருப்பதாகவும் அறிய வருகின்றது. இதனை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் போன்றவற்றால் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. அத்தோடு நாடு திரும்பிய அகதிகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை, நிவாரணம் ஒழுங்காக வழங்கப்படவில்லை, தொழில் வாய்ப்புக்களும் கொடுக்கப்படவில்லை.

இவை யாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு எனவும் அரசாங்கம் தொடர்ந்தும் கூறிவருகின்றது, இந்நிலையில் இலங்கை திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பு இல்லை அவர்களை திருப்பி அனுப்பாதீர்கள் எனக் கோருவதில் என்ன தவறு இருக்கின்றது?

மேலும் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற கோரிக்கையைத் தனியாக திரு மார்க்கஸ் பேக்கர் மட்டும் வைக்கவில்லை. அகதிகளுக்கான ஐ.நா, உயர் ஸ்தானிகராலயமும் முன் வைத்துள்ளது, அதாவது சிறிலங்காவில் அகதிகளை மீளக்குடியமர்த்த முடியும் என முன்னர் கருதி அந்நடவடிக்கையில் ஈடுபட்ட அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயமே இன்று தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோருகின்றது. அத்தோடு மனித உரிமை ஸ்தாபனங்களும் சிறிலங்காவில் இன்னமும் மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டுகின்றன.

இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் மார்க்கஸ் பேக்கர் மீது எரிந்து விழுவதிலும், சீறிப்பாய்வதிலும் பயன் ஏதுமில்லை, இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா கூறுவதை வேண்டுமானால் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் உலகமும் கண்களை மூடிக்கொண்டு இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. அவ்வாறு எதிர்பார்ப்பதும் மடமையாகும், அதே போன்றே ஒரு புறம் யுத்தத்தையும், ஒடுக்குமுறையையும் செய்துகொண்டு மறுபுறம் சமாதானம் நிலவுவதாகவும், மனித உரிமைகள் பேணப்படுவதாகவும் பிரசாரம் செய்வதில் பயனேதும் இல்லை. ஏனெனில் கண்களை மூடிக்கொண்டு பால் குடிக்கும் பூனை போல் உலகம் இல்லை,

---

...த்து வர இருக்கும் சரக்குகளில் சீனியை அதிகளவு ... ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளார். (சு)

## தனியார் சேவையினரிடம் வைத்தியசாலை பாதுகாப்பு

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் காவலாளிகள் அனைவரும் வேறுபகுதிகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

தற்போது ஆறு காவலர்கள் கடமையாற்றுவதாகவும் இதில் ஐந்து பேரை இம்மாத இறுதிக்குள் அங்குள்ள வேறு வேலைகளுக்கும் மாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இவ் வைத்தியசாலையின் பாதுகாப்பு கடமைகள் முழுவதும் தனியார் பாதுகாப்பு சேவையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம் இனிமேல் இத் தனியார் பாதுகாப்பு சேவையினரே பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது [ச] [சி]

## மாணவ தாதிகள் தெரிவு அனுமதிஅட்டைகள்வந்தன

(யாழ்ப்பாணம்)

மாணவ தாதிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் சுமார் ஐந்து பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான வினாத் தாள்கள் மற்றும் அனுமதி அட்டைகள் என்பன நேற்று முன் தினம் யாழ் கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்தன

இவற்றுள் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் இப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (பா)

---

... பதவியை விட்டு விலக தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர்.

## 53 ஆயிரம் குடும்பங்கள் தகுதி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வறுமை நிவாரண நிதியைப் பெறத்தகுதியாக 53 ஆயிரம் குடும்பங்கள் இருப்பதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மதிப்பிட்டுள்ளது வடக்கு கிழக்குக்கு வெளியே 40 ஆயிரம் குடும்பங்கள் இந்நிவாரணம் பெறதகுதி பெற்றவர்களாவர்.

## பரீட்சை

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் தோற்றி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாகாணசபையின் கீழுள்ள எழுதுவினைஞர் சேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை 16 ம் திகதி முதல் 20 ஆம்திகதிவரை யா. செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்களுக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டமை தெரிந்ததே. (சி,தி)

---

## ... எடுத்துவர முயற்சி

(நமது நிருபர்)

பிரிட்டிஷ் அரசினால் யாழ் போதனா வைத்திய சாலைக்கென வழங்கப்பட்ட உபகரணங்களின் ஒரு தொகுதி விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இவ் உபகரணங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட முடியாத நிலையில் கொழும்பில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்போது கொழும்பு சென்ற யாழ் போதனா வைத்திய சாலை அதிகாரிகள் இவற்றை இங்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும் இன்னும் மூன்று கொள்கலன்களில் அடைக்கப்பட்ட இவ் உபகரணங்களே இங்கு எடுத்துவரப்படாதிருப்பதாகவும் தற்போது இவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கான கப்பல் ஒழுங்குபடுத்தப்பட்டதும் அடுத்த மாதமளவில் இங்குவந்து சேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

## யாழ். மாவட்டத்திற்கு 20000 உயரின தென்னை விதைகள்

யாழ் மாவட்டத்திற்கு சுமார் இருபதினாயிரம் உயர் இன தென்னை விதைகள் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ் உயர் இன தென்னை விதைகள் றுணுவெலவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை வந்து சேர்ந்ததும் யாழ் மாவட்டத்தில் உள்ள பத்துசமநலசேவைகள் திணைக்களங்களில் நாற்று மேடை அமைத்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் சாவகச்சேரி சமநல சேவைகள்நிலையத்தில்தேவையான அளவு உள்ளூர் இனதென்னங் கன்றுகள் விற்பனைக்குள்ளதாக தெரிவிக்கப்பட்டது

---

# இந்தியப் பிரதமர் ராவ் அமெரிக்கா பயணம்

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்காவிற்கு ஒரு வாரப்பயணம் மேற்கொண்டு நேற்றுக்காலை நியூயோர்க் புறப்பட்டார். இந்திய -அமெரிக்க பொருளாதாரத்தை அதிகரிப்பது குறித்து பிரதமர் ராவ் ஜனாதிபதி கிளின்டன் உடன்பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அணுஆயுதபரவல் தடுப்பு, ஆயுதக்கட்டுப்பாடு, மனித உரிமைகள், காஷ்மீர் போன்ற விடயங்களில் இந்தியாவின் நிலைகுறித்து அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. வியாழனன்று நரசிம்மராவ் -கிளின்டன் பேச்சுவார்த்தையின் போது உலகவிவகாரம் இருதரப்பு அக்கறையுள்ள விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

பிரதமர் நரசிம்மராவுடன் செல்லும் குழுவில் நிதி அமைச்சர் மன் மோகன்சிங், வெளியுறவு இணையமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் பல அதிகாரிகள் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

## ஜெரிக்கோ நகரிலிருந்து இஸ்ரேல் வெளியேற்றம்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த ஜோர்தான் நதியின் மேற்குக்கரை நகரமான ஜெரிக்கோவிலிருந்து நேற்று முன்தினம் இஸ்ரேலிய துருப்பினர் முற்றாக விலக்கப்பட்டனர்.

27 வருடங்களின் பின் நேற்று முன்தினம் இஸ்ரேலிய துருப்பினர் வெளியேற்றத்தை தொடர்ந்து இஸ்ரேலிய கொடி இறக்கப்பட்டு பல வர்ணத்திலான பாலத்தீனிய கொடி ஏற்றப்பட்டது.

இஸ்ரேலிய படையினரின் வெளியேற்றம் பற்றிய செய்திகள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும். இஸ்ரேலியத் துருப்பினர் வசமிருந்த பகுதிகளை பாலத்தீனிய பொலிசார் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து செய்திகள் பரவமக்கள் வீதிகளில் குழுமி ஆடிப்பாடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## உளவுதுறை மறைத்ததாம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைச் சதி பற்றிய தகவல்கள் தமிழ்நாட்டின் உளவுத்துறை அதிகாரிகள் சிலரால் மறைக்கப்பட்டதாக முன்னாள் மத்திய அமைச்சரும் ஜனதாக் கட்சி தலைவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

## இடைத்தேர்தலில் போட்டி

(சென்னை)

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் முறையே 62 பேரும் 38பேரும் போட்டியிடுகின்றனர்.

## தீர்ப்பை ஏற்பதாக வை. கோ. தெரிவிப்பு

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னம், கொடி மற்றும் பெயர் என்பன தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதே ஜனநாயகத்தின் கொள்கை என்பதால் மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளின் முடிவை எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## அரசை நீக்க கோரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுப் போயிருப்பதால் மத்திய அரசு அரசியலமைப்பு சட்டத்தின் 356 வது சரத்தின் கீழ் தமிழக அரசை பதவிநீக்கம் செய்ய வேண்டுமென்று எம் ஜி ஆர் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ்நாட்டில் ஊழலும் லஞ்சமும் பெருகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05 15-ஞாயிறு இரவு

08.01 - குமுதினி படுகொலைநினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''குமுதினியின் குமுறல்கள்''

08.20 - தாயகப்பாடல்கள்

08 30 - செய்திகள்

08 40 லெப்டினன்ட் கேணல் நவம் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''மண்ணின் வரலாற்று நாயகன் நவம்''

1994-05 16 திங்கள் காலை

07 02 - மாவீரவணக்கம்

07.15 - மணியாரம்

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07 40 - தாயகப்பாடல்கள்

## பல்கலை. ஊழியருக்கு பத்துவீத சம்பள உயர்வு

(கொழும்பு)

சகல பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரக் கூடியதாக பத்து சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும். சகல ஊழியர்களுக்கும் இம்மாதம் 20ஆம் திகதி ஆயிரம் ரூபா முற்பணம் வழங்கப்படும். இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டார நாயக்க கல்வி கலாசார அமைச்சர் ஜே. எம். லொக்கு பண்டார மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து இம்மாதம் இருபதாம் திகதி முதல் கடைப்பிடிக்கப் பட இருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட இருப்பதாகவும் கூறப்படுகிறது

**வேதாரணியம் பகுதியில்**

## தமிழக மீனவர் மீது சிறிலங்கா கடற்படை சூடு

(சென்னை)

தமிழ்நாட்டின் வேதாரணியம் பகுதிக்கு அருகேயுள்ள கோடிக்கரைப்பகுதியில் தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இத்தாக்குதலில் மீனவர்களின் மீன்பிடிப்படகுகள் பலத்த சேதமடைந்ததாகவும், மீனவர்கள் சிலர் காயமுற்றதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த இருமீனவர்கள் மற்றும் கடலில் குதித்த மீனவர் ஒருவர் ஆக மொத்தம் மூன்று பேரைக் காணவில்லை என்று தமிழக காவல்துறையினரிடம் புகார் கூறப்பட்டுள்ளது

## மாணவருக்கான இலவச சீருடை அடுத்த மாதம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இவ் வருடத்திற்கான சீருடை அடுத்த மாதம் 23 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக வழங்கப்படும்என கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது

எனவே நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் தத்தமது பாடசாலை மாணவர்களின் முழுத்தொகையையும் தமது கோட்ட அலுவலகங்கள் ஊடாக உடனடியாக அனுப்பி சீருடைத் துணிகளைபெற்றுக் கொள்ளுமாறு அமைச்சு வேண்டுகோள்விடுத்துள்ளது

## திறப்புவிழா

'விளக்கு' சஞ்சிகையின் நடுவப்பணிமனையினைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நாளை மு. ப. 9 மணிக்கு எண் 689, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற இருப்பதால் அந்த நிகழ்வில் பேரவையின் அனைத்து உறுப்பினர்களையும், 'விளக்கு'பாடசாலைப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வாண்மை விருத்திக் குழுவினர் கேட்டுக் கொள்ளுகின்றனர்,

## மாநாடு

பிரதேச செயலகங்களில் பணியாற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள் அனைவருக்குமான மாநாடு கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது

**பிரேமதாசா**

அவர்கள் தெரிவித்துள்ளனர்

பிரேமதாசாகொலை நடைபெற்ற ஒரு சில வினாடிகளில் அப்பகுதியைக் கழுவிச் சுத்தம் செய்ததன் மூலம் அங்கு கொலை தொடர்பாக கிடைக்கக்கூடிய சகல தடயங்களும் அழிக்கப்பட்டுவிட்டதாவும் இதுவே தாம் சதி முயற்சி என சந்தேகப்படக் கூடியதாக அமைவதாகவும் பிரேமதாசா குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்

எனவே மக்களுக்கு உறங்கிக் கிடக்கும் உண்மையை வெளிக்கொண்டுவரும் பொருட்டு எதிர் காலத்தில் தம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் பிரேமதாசா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்

# களுத்துறை சிறையில் உள்ள 45பேர் சார்பாக வழக்கு தாக்கல்

(கொழும்பு)

களுத்துறை சிறை முகாமில் தடுத்து வைத்திருக்கும் 45பேர் சார்பாக வழக்கறிஞர் சங்கத்தின் மனித உரிமைகள் மையம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது

சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டு சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் தாம் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்

ஒரு முகாமிலிருந்து மற்றொரு முகாமுக்கு மாற்றப்படும் போது இராணுவம் தம்மைத்தாக்கியதாக மனித உரிமைகள் சட்டத்தரணிகள் அவர்களைச் சந்தித்த போது அவர்கள் புகார் கூறியுள்ளனர்

இந்த 45 வழக்குகளும் மே மாதக் கடைசியிலும், ஜூன் மாத ஆரம்பத்திலும் உச்சநீதி மன்றத்தினால் விசாரிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 110பேரை மனித உரிமை மையத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் 2-4 94இல் சந்தித்தனர் அதன் விளைவாகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன மேலும் 20 வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## கடும்வெய்யில் ஒருவர் மரணம்

(சென்னை)

மதுரை நகரில் கடும்வெய்யில் காரணமாக நேற்றுமுன் தினம் ஒருவர் மரணமாகியுள்ளர் இங்கு வெப்பநிலை 104பாகை பரனைட்டை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது;

**தெகிவளை**

டன,

சட்ட விரோதமான ஆயுதங்கள் தொடர்ந்து கைப்பற்றப்படும் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்'

ஆயுதபாணிகளான அரசியல் வாதிகளை நிராயுதபாணியாக்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட எம், பி, சி வி குணரெட்னா கோரிக்கை விடுத்தது தெரிந்ததே,

பலம் பொருந்திய அரசியல் வாதிகளுடன்தொடர்புடைய இரண்டு பாதாள உலகக் குற்றவாளிக் குழுக்களைப் பொலிசார்தீவிரமாகத்தேடும் சந்தர்ப்பத்திலேயே பொலிஸ் மா அதிபர் பிறாங்டி சில்வா அரசியல் வாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்,

**இந்திய**

பட்டதற்கான காரணங்களில் கூறப்பட்டுள்ளது.

நவீன ஆயுதங்கள் வெடிமருந்துகளுடன் தமிழ் நாட்டி

## கிரிக்கட் போட்டி

யாழ்- ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 9ஆவது வருடாந்த மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது நாளான இன்று, காலை 8-30 மணியளவில் சென்றலைட்ஸ்விளையாட்டுக் கழக நீலஅணிக்கும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலும் மாலை 1-00 மணியளவில் சென்றலைட்ஸ்விளையாட்டுக் கழக சொக்ஸ் அணிக்கும், பற்றீசியன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலும் நடைபெறும்.

**மண்ணுக்காக**

கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடைபெறும் மண்ணுக்காக வீடியோப் படத்தில் பங்கேற்ற கலைஞர்களை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்கள் பரிசளித்துக் கௌரவிப்பார். படத்தின் மதிப்பீட்டுரையை கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் ஆற்றுவார் பதிலுரையை நெறியாளர் திரு. ஜோன். கணேசமூர்த்தியும், நன்றியுரையை தயாரிப்பாளர் திரு. தேவரண்ணா அவர்களும் ஆற்றுவர்

இறுதியில்''மண்ணுக்காக'' வீடியோப்படம் பார்வையாளர்களுக்காக காண்பிக்கப் படும்.

## நெற்செய்கை பாதிப்பு

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் மன்னார் மாவட்டத்தில் மட்டும் கடந்த நான்கு வருடங்களில் சுமார் 50,000 ஏக்கர் நெல் வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

**தலைமை**

இவர் தமது உத்தியோக பூர்வமான கடமையை நேற்று நிலாவெளியில் அமைந்த காலாட்படை தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொண்டார் என தெரியவருகின்றது-

**இலங்கையில்**

ஆஜர் செய்யப்பட வேண்டும் என்ற சட்ட விதியும் கூட அவசரகால சட்டத்தின் கீழ் மீறப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கடற்படையினரால் பலாலி இராணுவ முகாமிலும், காரைநகர் கடற்படை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலர் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுவதாகவும், இதனால் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் மன நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது

# மரண அறிவித்தல்கள்

## அமரர் கோபால்

திரு கோபால் அவர்கள் (இளைப்பாறிய இ. போ. ச வெல்டர்) காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற பூரணம் அவர்களின் அன்புக் கணவரும், பொன்னம்பலம் (இ போ. ச.), கந்தசாமி (இ. போ. ச ), சிறீதரன், ரமேஷ், தர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-04-94 ஞாயிறு (இன்று) காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

43/2 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-9426)

தகவல்:
பிள்ளைகள்

## செல்வன் சி. ஞானபாஸ்கரமூர்த்தி

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி சரஸ்வதி அவர்களின் அன்பு மகன் ஞானபாஸ்கரமூர்த்தி 14-5-94 அன்று அகால மரணமானார். இவர் கௌரிமனோகரி, வசந்தகௌரி, சிவானந்தகௌரி, சிவனேசகௌரி, சிவபாலகௌரி சிவஞானகௌரி, ராஜமார்த்தாண்டமூர்த்தி, வீரமார்த்தாண்டமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீதரன். விக்கினேஸ்வரன். சிவம், குகனேசன், ரதீசரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி. பகல் 3 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்;

பழம் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

க. விக்கினேஸ்வரன்,
(மைத்துனர்)
(8291)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்





யாளர்களுக்காக காண்பிக்கப் படும்.

பெரிதும் பாதிக்கப்பட்டிருப்ப தாகவும் கூறப்படுகிறது

## திறப்புவிழா

'விளக்கு' சஞ்சிகையின் நடுவப் பணிமனையினைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நாளை மு. ப. 9 மணிக்கு என் 689, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடை பெற இருப்பதால் அந்த நிகழ்வில் பேரவையின் அனைத்து உறுப்பினர்களையும், 'விளக்கு' பாடசாலைப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வாண்மை விருத்திக் குழுவினர் கேட்டுக் கொள்ளுகின்றனர்,

பிரேமதாசா அவர்கள் தெரிவித்துள்ளனர்

பிரேமதாசா கொலை நடைபெற்ற ஒரு சில வினாடிகளில் அப்பகுதியைக் கழுவிச் சுத்தம் செய்ததன் மூலம் அங்கு கொலை தொடர்பாக கிடைக்கக்கூடிய சகல தடயங்களும் அழிக்கப்பட்டுவிட்டதாவும் இதுவே தாம் சதி முயற்சி என சந்தேகப்படக் கூடியதாக அமைவதாகவும் பிரேமதாசா குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்

எனவே மக்களுக்கு உறங்கிக் கிடக்கும் உண்மையை வெளிக்கொண்டுவரும் பொருட்டு எதிர் காலத்தில் தம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் பிரேமதாசா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்

ஆயுதபாணிகளான அரசியல் வாதிகளை நிராயுதபாணியாக்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட எம், பி, சி வி குணரெட்னா கோரிக்கை விடுத்தது தெரிந்ததே,

பலம் பொருந்திய அரசியல் வாதிகளுடன் தொடர்புடைய இரண்டு பாதாள உலகக் குற்றவாளிக் குழுக்களைப் பொலிசார் தீவிரமாகத் தேடும் சந்தர்ப்பத்திலேயே பொலிஸ் மா அதிபர் பிறாங்டி சில்வா அரசியல் வாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்,

---

விடுதலைப் புலிகள் மாணவரமைப்பினால்

நடாத்தப்படும்

### போராளிகளின் இன்னிசை கானங்கள்

காலம்:- 15 - 05 - 1994 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- மாலை 7.00 மணி

இடம்:- புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானம்

**அன்பளிப்பு:- 25/- 10/- 5/-**

அனைத்து தமிழீழ மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (8292)

---

யாழ் ஸ்ரீதரில்...

சனி, ஞாயிறு காலை 10,-30

மாலை 3, 6 மணி

இன்று மட்டும்

## "காற்றுவெளி"

இத்துடன் மார்ச் 94

### "ஒளிவீச்சு"

காண்பிக்கப்படும்

நாளை முதல்

## "மண்ணுக்காக"

(சி-9370)

---

இந்திய

பட்டதற்கான காரணங்களில் கூறப்பட்டுள்ளது.

நவீன ஆயுதங்கள் வெடிமருந்துகளுடன் தமிழ் நாட்டினுள் ஊடுருவ விடுதலைப்புலிகள் அமைப்பு முயல்கிறது என்றும் தமிழ் நாட்டில் செயற்படுவதற்காக புகலிடங்களை அமைக்க முற்படுகிறது என்றும் காவலில் இருக்கும் விடுதலைப்புலிகளைப் பலவந்தமாக விடுவிக்கிறது என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

தனித் தமிழ்நாடு கோரிக்கையை ஊக்குவிக்கும் சுவரொட்டிகளை கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் விடுதலைப் புலிகள் வெளியிட்டு தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிட்டதாதகவும் பிரச்சாரக் கட்டுரைகள் மூலம் இந்த அரசைப் பழித்து பிரிவினைவாத உணர்வைத் தூண்டுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாட்சிகளாகவும் புலனாய்வு அதிகாரிகளாகவும் இருந்தவர்களை, தீர்த்துக் கட்டுவதாக மிரட்டிவருகிறது என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகள் இலங்கையிலுள்ள அமைப்பாக இருந்தபோதும், இந்தியாவின் அதன் அனுதாபிகள் ஆதரவாளர்கள் செயல்படுவதாலும் இந்திய ஒற்றுமை இறையாண்மை, எல்லை ஆகியவற்றின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுவதாலும் விடுதலைப் புலிகள்மீது தடை விதிப்பது அவசியமாகிறது என்றும் இந்திய மத்திய அரசின் உள்துறை கூறியுள்ளது

---

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்





| மேஜர் குலதீபன் | | வீரவேங்கை தயாநிதி |
|---|---|---|
| **நாகலிங்கம் சச்சிதானந்தன்** | | **சின்னத்தம்பி கலாநிதி** |
| களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு | | அம்பிளாந்துறை மட்டக்களப்பு |
| 21-03-1966 > | பிறப்பு | < 10-05-1970 |
| 15-05-1992 > | வீரச்சாவு | < 15-05-1992 |

மட்டக்களப்பு - லாவானையில் சிறிலங்கா இராணுவம் பதுங்கித்தாக்கியதில் வீரச்சாவடைந்தனர்

பயிற்சியாசிரியராய் பலகாலம்.........
எளிமையான போராளியாக எம்
குலதீபன்......
அவன் பயிற்சியின் இறுக்கம்;
உறுதியின் எதிரொலியில்
முளைத்த புலி வீரர்கள்
படையணியாகி......

இன்னும் இன்னும்...
இதனால் இவனொரு சரித்திரம்
போரிடும் எல்லையில்
நாம் ..
வியூகமாய் நுணுக்கமாய்
விண்ணில் இருந்து...
விண்ணில் இருந்து...
மண்ணில் பிறந்து...
மண்ணில் பிறந்து...

(8287)

- குடும்பத்தினர்

---

## நாளை முதல் மண்ணுக்காக

(இ)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.